## தேர்வு -2 பொதுத் தமிழ்

1.கதிரவா! ஏற்றுமகிழ்வாய் உயர்ந்தவா, உயிரின் முதலே! என்று கதிரவனை புகழ்ந்து பாடுவது எந்த தலைப்பின் கீழ் வருகிறது?

a) அண்ணாவின் கடிதம் b) பொங்கல் வழிபாடு
c) தமிழர் திருநாள் d) பொங்கல் திருவிழா

2.ந.வேங்கட மகாலிங்கத்தின் காலம்

a) 15.08.1901 - 04.12.1976 b) 15.09.1900- 04.11.1976
c) 15.08.1900- 04.12.1976 d) 16.08.1900- 05.12.1976

3.தோல் வற்றிச் சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும் தூ உயம் என்பார் தொழில் என்று கூறியவர் யார்?

a) விளம்பி நாகனார் b) சமண முனிவர்
c) நல்லாதனார் d) ஔவையார்

4.அறவுணர்வு உடையாரிடத்து உள்ளவை என்னும் தலைப்பின் கீழ் அறக்கருத்துகளை கூறியுள்ள நூல் எது?

a) திரிகடுகம் b) ஏலாதி
c) சிறுபஞ்சமூலம் d) நான்மணிக்கடிகை

5.பெண்களுக்குத் தாய்மையால் பெருமை சேர்த்தவன், கொடைத் தன்மையை உயிரினங்களுக்கு தந்தவன் என இறைவனை புகழ்ந்தவர் யார்?

a) தாயுமானவர் b) திருமூலர்
c) வள்ளலார் d) திரு.வி.க

6.சரியானதைத் தேர்ந்தெடுக்க

(i) 1924- 1938 வரை- ந.பிச்சமூர்த்தி கோவில் நிர்வாக அலுவலராக இருந்தார்
(ii) 1938- 1954 வரை- ந.வேங்கட மகாலிங்கம் வழக்குரைஞராக இருந்தார்

a) (i) மட்டும் சரி b) (ii) மட்டும் சரி
c) இரண்டும் சரி d) மேற்கண்ட இரண்டும் தவறு

7. "செருஅடுதோள் நல்லாதன்" எனப் பாயிரம் திரிகடுகத்தை இயற்றிய நல்லாதனாரைக் குறிப்பிடுகிறது இதன் பொருள் என்ன?

a) குடிப்பெயர் b) போர்வீரன்
c) படைத்தளபதி d) அரசன்

8.தவறானதைக் கண்டறி?

a) வனப்பு - அழகு
b) நெறி - வழி
c) பால்பற்றி - ஒருப்பக்கச்சார்பு
d) தூறு - விதை

9. 'திருத்து' என்னும் ஊரில் பிறந்தவர் யார்?

a) ந.பிச்சமூர்த்தி
b) நல்லாதன்
c) அழகிய சொக்கநாதப்புலவர்
d) திரிகூடராசப்பக்கவிராயர்

10. 'கடுகி' என்பதன் பொருள் யாது?

a) கடுகு b) பொன்
c) மெதுவாக d) விரைந்து

11. ந.பிச்சமூர்த்தி கவிதைகள் என்னும் நூலில் எத்தனை பாடல்கள் இடம்பெற்றுள்ளன?

a) 83 b) 73 c) 93 d) 84

12. கதிரவனால் பிறந்தவை யாது?

a) கனி, கரும்பு, நெல்
b) விண், மண், நிலா
c) கனி, மண், நெல்
d) விண், மண், நெல்

13. புதரில் விதைத்த விதை எனும் தலைப்பில் திரிகடுகத்தில் மூன்று அறக்கருத்துகள் கூறப்பட்டுள்ளன அவற்றில் பின்வரும் ஒன்று வராது அதனை கண்டறிக

a) ஒழுக்கம் இல்லாதவன் மேற்கொண்ட தவம்
b) அறம் தவறாது செயல்படும் ஆற்றல் இல்லாதவன்
c) பெரும்பயன் கிடைத்தால் பொய்ச்சாட்சிக் கூறுதல்
d) மேலான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவன்

14. காராளர் என்பதன் பொருள் என்ன?

a) உழவர்
b) வேளாண் தொழில் செய்பவர்
c) மேகத்தை ஆளுகின்றவர்களாகிய உழவர்
d) வெள்ளாளர்

15.தொழிலாளர் நலனுக்கும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபட்டவர் யார்?

a) பெரியார் b) மக்கள் கவிஞர்
c) ந.பிச்சமூர்த்தி d) தமிழ்த்தென்றல்

16. தமிழ்த்தென்றல் எந்த ஊரில் பிறந்தார்?

a) திருவாரூர் b) கும்பகோணம்
c) தண்டலம் d) போரூர்



AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com

17. சரியானவற்றைத் தேர்ந்தெடுக்க
a) ஆழி - கலப்பை
b) மேழி - மோதிரம்
c) ஈயும் - அளிக்கும்
d) புண்ணியனார் - குமரகுருபரர்

18.குன்றின் மேலிட்ட விளக்காகச் சமுதாயத்தில் விளங்கச்செய்யும் நூல் எது?
a) நான்மணிமாலை b) திரிகடுகம்
c) கம்பராமாயணம் d) நான்மணிக்கடிகை

19. திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும், பொருந்திய தூய்மொழி................................
a) செம்மொழி b) உயர்மொழி
c) தனிமொழி d) உயர்தனிச்செம்மொழி

20. "தாய்மொழிக் கல்வி பற்றிய காந்தியடிகள் கடிதம்" எப்போது ஆற்றிய உரை?
a) 02.10.1918 b) 02.10.1917 c) 02.10.1916 d) 02.10.1915

21. கம்பர் எழுதாத நூல்?
a) திருக்கை வழக்கம் b) ஏரெழுபது
c) சரஸ்வதி அந்தாதி d) மூவருலா

22. "சூழ்வினையை நீக்கும் கை என்றும் நிலைக்கும் கை நீடுழி காக்கும் கை" என யாருடைய கைகள் வருணிக்கப்படுகின்றன?
a) பெருமாள் b) உழவர்
c) சிவன் d) அரசன்

23. "மக்கள் அறிவுள்ளவர்களாக இருந்தால் அவர்தம் மொழியும் அவ்வாறே அமையும்" என கூறியவர் யார்?
a) பரிதிமாற்கலைஞர் b) பெரியார்
c) ஜி.யு.போப் d) காந்தி

24. இயற்கை வேளாண்மையில் எத்தனைக்கூறுகள் உள்ளன?
a) 6 b) 5 c) 7 d) 4

25. நீர்வளம் குறைந்த பகுதி
a) நன்செய்
b) தரிசு
c) வானம் பார்த்த பூமி
d) மேற்கண்ட எதுவுமில்லை

26. பொருந்தாதைத் தேர்வு செய்க
a) கம்பு b) கேழ்வரகு
c) சாமை d) நெல்

27. சரியாக பொருந்தியவற்றை தேர்வு செய்க
a) நெல்லுக்கு - ஏரோட
b) வாழைக்கு - நண்டோட
c) தென்னைக்கு - தேரோட
d) கரும்புக்கு - வண்டியோட

28. பஞ்சகவியத்தில் இல்லாத ஒன்று
a) பால் b) வெண்ணெய்
c) நெய் d) தயிர்

29. கேட்காத கடனும் பார்க்காத பயிரும்................
a) பால் b) தாள்
c) தாழ் d) பாழ்

30.தூரத்து ஒளி என்னும் சிறுகதை பின்வரும் யார் எழுதியது
a) அழகிய மணவாளன் b) க.கௌ.முத்தழகர்
c) நாட்டுபுறக்கதை d) லட்சுமி

31. புரோச் நகர் எந்த மாநிலத்தில் உள்ளது
a) மகாராஷ்டிரா b) உத்திரகாண்ட்
c) உத்திரபிரதேசம் d) குஜராத்

32. பயிற்றமொழியை குறித்து சிந்திக்காமல் கல்விக் கற்பிப்பது, அடித்தளம் இல்லாமல் கட்டடத்தை போன்றது
a) உயர்த்துவது b) கட்டுவது
c) எழுப்புவது d) அஸ்திபாரம் போடுவது

33. பொய்யாமை அன்ன புகழ் இல்லை எய்யாமை எல்லா.....................தரும்
a) அறமும் b) புகழும்
c) செயலும் d) நன்மையும்

34.மனிதன் மனிதனாக வாழ மனிதன் மனிதனுக்கு கூறிய அறிவுரை
a) அறத்துப்பால் b) பொருட்பால்
c) உலகப்பொதுமறை d) தேவாரம்

35. வாழ்க்கை செம்மையுறும், பண்புகள் வளரும், உலகெலாம் ஒன்றெனும் உயர்குணம் தோன்றும், எல்லா உயிரிடத்திலும் அன்பு தழைக்கும் இது எந்த நூலினைப் படிப்பதால் விளையும் பயன்?
a) கம்பராமாயணம் b) உலகப்பொதுமறை
c) திருவாசகம் d) புறநானூறு

36. எளிதில் பேசவும், எளிதில் பாடல் இயற்றவும் இயற்கையாக அமைந்தது தென்மொழியாகிய தமிழ் ஒன்றே என்று கூறுபவர் யாது?



AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com

a) பாரதியார் b) பாரதிதாசன்
c) வள்ளலார் d) அறிஞர்கள்

37. "உலக மொழிகளில் சிறந்தது தமிழ்மொழியே" என்று குறிப்பிடுபவர்/கள் யார்?
a) பாரதியார் b) பாரதிதாசன்
c) வள்ளலார் d) அறிஞர்கள்

38. கிரேக்கம், இலத்தின், சமற்கிருதம், உள்ளிட்ட மொழிகளை செம்மொழி எனப்பட்டியலிடுபவர் யார்?
a) டாக்டர் கிரெளஸ் b) ச.அகத்தியலிங்கம்
c) கால்டுவெல் d) பரிதிமாற்கலைஞர்

39. "சிந்தனை செல்வம்" என்ற சிறுகதை நூலினை எழுதியவர் யார்?
a) திருமுருக கிருபானந்தவாரியார்
b) க.கெள.முத்தழகர்
c) லட்சுமி
d) அழகிய மணவாளதாசர்

40 (i) தருமம் செய்த பணம் எனக்கு உரியது
(ii) என்கருத்தை ஏற்று நடக்கின்றவனே எனக்கு உரிய மகன்
(iii) இறைத்தொண்டு செய்த நேரமே எனக்கு உரியது
இந்த அறக்கருத்துகள் ஒரு சிறு கதை வழியே கூறப்படுகிறது. அந்த சிறுகதையின் தலைப்பு என்ன?
a) வீரச்சிறுவன் b) உரியது
c) துரத்தி ஒளி d) மெல்லமெல்ல மற

41. காரணம் அறியவியலாப் பெயர்கள் எல்லாம்.........
a) காரணப் பெயர்
b) இடுகுறிப் பெயர்கள்
c) இடுகுறி சிறப்புப் பெயர்
d) இடுகுறி பொதுப் பெயர்

42.மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் எனக் கூறியவர் யார்?
a) சீத்தலைச்சாத்தனார்
b) திருவள்ளுர்
c) இளங்கோவடிகள்
d) மணிமேகலை

43. மூன்று என்பதன் தமிழெண்
a) ங b) அ c) க d) உ

44. நீர் நிற்க நான் இருக்க இந்தச் சிறப்பு ஒன்று போதாதா யார் யாரிடம் கூறியது?
a) அரசர் பட்டினத்தடிகளிடம் கூறியது
b) பட்டினத்தடிகள், அரசரிடம் கூறியது
c) ராமன், ராவணினடம் கூறியது
d) பீர்பால். அரசரிடம் கூறியது.

45. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுப்படுத்துவது
a) வேற்றுமை b) வேற்றமை உருபு
c) எழுவாய் d) பயனில்லை

46. பெயர்ச்சொல்லினது பொருளைச் செயப்படு பொருளாக வேறுப்படுத்துவது.................. வேற்றுமை
a) நான்காம் b) மூன்றாம்
c) ஐந்தாம் d) இரண்டாம்

47. விளி வேற்றுமை என அழைக்கப்படும் வேற்றுமை எது?
a) முதலாம் வேற்றுமை b) ஏழாம் வேற்றுமை
c) எட்டாம் வேற்றுமை d) ஆறாம் வேற்றுமை

48. உள், மேல், கீழ் என்பன முறையே இடப் பொருளை உணர்த்துகின்றன இது எந்த வேற்றுமையின் உருபுகள்?
a) நான்காம் வேற்றுமை b) ஐந்தாம் வேற்றுமை
c) ஆறாம் வேற்றுமை d) ஏழாம் வேற்றுமை

49. இனமில்லா அடைமொழிக்கு பொருந்தாத ஒன்றை எழுதுக?
a) செங்கதிரோன் b) கருங்காக்கை
c) வெண்ணிலவு d) தமிழ்பாடநூல்

50. ஒரு சொல்லின் எழுத்து வேறுபட்டாலும் பொருள் மாறுபடாது இருப்பதனைப் போலி என்பர் இதற்கு தகுந்த உதாரணம் எது?
a) அகன் b) முகன்
c) அறம் d) a மற்றும் b

51. தமிழ்ச்சொல்லைத் தேர்வு செய்க
a) ஈசன் b) காகிதம்
c) உபசரித்தல் d) தொடக்கம்

52. பால் பொங்கும் பொழுது "பொங்கலோ பொங்கல்" என்னும் மங்கல ஒலி எங்கும் கிளம்பும் அப்பொழுது பெண்கள் குரவை ஆடுவர் பிறகு "பூவும் புகையும் பொங்கலும்" கொண்டு இல்லுறை தெய்வத்தை வணங்குவர். அனைவரும் வயிரார உண்டு மகிழ்வர் என பொங்கல் பற்றிக் குறிப்பிடும் நூல் எது?
a) தமிழர் விருந்து b) தமிழர் பண்பாடு
c) தமிழின்பம் d) தமிழர் கலாச்சாரம்



AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com

53. புனல்விழா நடைபெறும் இடங்களில் ஒன்று
a) காவிரிப்பூம்பட்டினம் b) கழார்ப்பெருந்துறை
c) கோழியூர் d) உறையூர்

54. சங்கத்தமிழ் புலவர் வரிசை என்ற நூலினை எழுதியவர் யார்?
a) புலவர் கா.கோவிந்தன்
b) மயிலை.சீனி. வேங்கட சாமி
c) ரா.பி.சேதுபிள்ளை
d) பண்டித கதிரேசசெட்டியார்

55. ஏக்கற்று என்பதன் பொருள்
a) மகிழ்ச்சி b) செல்வர்
c) ஏழை d) கவலைப்பட்டு

56. "தன்னே ரிலாத தமிழ்" எனக் கூறும் நூல் எது?
a) கம்பராமாயணம் b) திருவாசகம்
c) தண்டியலங்காரம் d) பன்னிருப்பாட்டியல்

57. உலக முதன் மொழியாய் தமிழ் தோன்றியும் வழக்கொழியாமல் இருப்பதற்கான காரணமாக எதனைக் குறிப்பிடுகின்றனர்?
a) தமிழின் வல்லோசை b)தமிழின் மெல்லோசை
c) பண் d) எளிமை

58. அம்மை, அப்பன் என்பது............நாட்டுச் சொல்
a) நாஞ்சில் b) பாண்டிய
c) சோழ d) சேர

59. வாழ்வியலுக்கான பொருளிலக்கணத்தைக் கூறும் மொழி எது?
a) ஈப்ரு b) சமஸ்கிருதம்
c) கிரேக்கம் d) தமிழ்

60. கரடு என்பது எதனைக் குறிக்கும்
a) மலை
b) குன்றிலும் உயரத்தில் குறைந்த பகுதி
c) மலையிலும் உயரத்தில் குறைந்தப் பகுதி
d) ஓங்கியுர்ந்த நிலப்பகுதி

61. 'ஆர்' என்பது எந்த மரத்தினைக் குறிக்கும்
a) ஆலமரம் b) களாச்செடி
c) அத்திமரம் d) பனைமரம்

62. தமிழகத்தை பாளையங்களாகப் பிரத்த மன்னர்கள் யார்? எத்தனைப் பாளையங்களாகப் பிரித்தனர்?
a) நாயக்க மன்னர்கள், 62 b) மராத்தியர்கள், 72
c) பாண்டியர்கள், 62 d) நாயக்கர்கள், 72

63. உயர்களிடத்தில் அன்பு வேணும்- தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும் எனப் பாடியவர் யார்?
a) புரட்சிக்கவி b) மகாகவி
c) திருமூலர் d) வள்ளலார்

64. தமிழகத்தின் சிறப்பு மரம்
a) மாமரம் b) ஆலமரம்
c) பனைமரம் d) பலாமரம்

65. விளை நிலங்கள் வீட்டுமனையாகும் போது முதல் களப்பலி எது?
a) மாமரம் b) தென்னைமரம்
c) ஆலமரம் d) பனைமரம்

66. பின்வரும் கூற்றுகளை கவனி
(i) கால்டுவெல் 1815-ல் இங்கிலாந்தில் பிறந்தார்
(ii) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதிய இவர் 1891 ஆம் ஆண்டு மறைந்தார்.
(iii) திராவிட மொழிகளின் தாய் 'தமிழ்' என உலகுக்குப் பறைசாற்றிய இவர், சிவகங்கையில் உள்ள இடையன் குடியில் வாழ்ந்தார் மேற்கண்டவற்றுள் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க
a) (i) மற்றும் (ii) சரி b) (ii) மற்றும் (iii) சரி
c) (i) மற்றும் (iii) சரி d) (ii) மட்டும் சரி

67. வேற்படை உடைய வேந்தனின் கடமை நாட்டைப் பேணிக்காப்பதே என்று கூறியவர் யார்?
a) ஔவையார் b) நல்லாதனார்
c) மகாகவி d) மோசிக்கீரனார்

68. "தானை" என்பதன் பொருள் யாது?
a) அரசன் b) தளபதி
c) படை d) குடியானவன்

69. மோசி, கீரன் என்பது முறையே
a) ஊர், பெயர் b) ஊர், குடிப்பெயர்
c) குடிப்பெயர், ஊர்ப்பெயர் d) புலவரின்பெயர், குடிப்பெயர்

70. மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்று கூறும் நூல் எது?
a) புறநானூறு b) திருக்குறள்
c) அகநாநூறு d) நாலடியார்

71. புறம் என்பது.......செய்தலும்............ செய்தலும் ஆகும்
a) அறம், ஆட்சி b) மறம், அறம்
c) மறம், அன்பு d) ஆட்சி. மறம்

72. எந்த நூலைக் கற்பதனால், தமிழர்தம் பழங்காலப் புறவாழ்க்கையையும் பண்பாட்டையும் அறியலாம்?
a) அகநானூறு b) பட்டினப்பாலை
c) புறநானூறு d) பதிற்றுப்பத்து

73.கற்போரின் குற்றங்களை நீக்கி, அறம்பொருள் இன்பங்களை அடைவதற்கான வழிமுறைகளை அறிவுரைகளை கூறி நல்வழிப்படுத்தும் நூல் எது?
a) பழமொழிநானூறு b) முதுமொழிக்காஞ்சி
c) மதுரைக்காஞ்சி d) சிறபஞ்சமூலம்

74. முதுமொழிக்காஞ்சியைப் பற்றிய சரியான கூற்றைக் கண்டறிக.
(i) அறவுரைக் கோவை என அழைக்கப்படுகிறது.
(ii) காஞ்சித்திணையின் துறைகளுள் ஒன்று
(iii) காரியாசான் இவருடைய பாடல்களை மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார்.
(iv) ஆர்கலி என்பதற்கு அன்பு என்பது பொருள்
a) i, ii, iv சரி b) i, ii, iii மட்டும் சரி
c) i, ii மட்டும் சரி d) மேற்கண்டனைத்தும் சரி

75. மதுரை கூடலூர்கிழார் எது?
a) மதுரைக்காஞ்சி b) பழமொழி நானூறு
c) பட்டினப்பாலை d) முதுமொழிக்காஞ்சி

76. குமருகுருபரர் பற்றிய கூற்றுக்களை காண்க. அவற்றுள் தவறானவற்றைக் தேர்வு செய்க.
(i) காலம் 18 நூற்றாண்டு
(ii) திருவைகுண்டம் இவரது ஊர்
(iii)நீதிநெறி விளக்கம், மதுரைக் கலம்பகம், திருக்கைவழக்கம், கந்தர்கலிவெண்பா முதலிய நூல்களை இயற்றினார்.
(iv) நான்மணிமாலை என்பது தமிழில் வழங்கும் 96 சிற்றிலக்கிய வகைக்குள் ஒன்று
a) i, iii, தவறு b) ii, iv தவறு
c) i, ii, iii, தவறு d) அனைத்தும் தவறு

77. திருவாரூர் நான்மணிமாலையில் எத்தனை செய்யுள்கள் உள்ளன?
a) 42 b) 40 c) 41 d) 43

78. தென்கமலை என்பது
a) தென்பொதியைமலை b) தெற்குமலை
c) தெற்கில் உள்ள திருவாரூர் d) பூங்கோவில்

79. மெய்ப்பொருள் கல்வி என்ற தலைப்பின்கீழ் உள்ள பாடலை இயற்றாதவர் யார்?
a) மதுரைக்கூடலூர் கிழார்
b) அரங்கசாமி
c) பாவலர் மணி
d) தமிழகத்தின் வேர்ட்ஸ் வொர்த்

80. மதோன்மத்தர் என்ற சொற்றொடரில் குறிக்கப்படுபவர் யார்?
a) பெருமாள் b) சிவபெருமாள்
c) பிரம்மன் d) மன்மதன்

81. காளைகளின் பல்வேறு பெயர்கள், விதைகளின் பெயர்கள், மீன்வகைகள் என மருதவளம் பற்றி அறிய உதவும் நூல் எது?
a) திருவாரூர் நான்மணிமாலை
b) முதுமொழிக்காஞ்சி
c) நெடுநெல்வாடை
d) முக்கூடற் பள்ளு

82. மீனாட்சி சுந்தரனாரைப் பற்றிய தவறானக் கூற்றைத் தேர்ந்தெடுக்க
a) 06.04.1815- ல் பிறந்தார் 01.02.1876- ல் மறைந்தார்
b)திருவாடுதுறையில் ஆதினமாக இருக்கும்போது உ.வே.சாவை மாணவனாகக் கொண்டார்
c) நோய்க்கு மருந்து இலக்கியம் என்றார்
d)திருநெல்வேலி மாவட்டம் எண்ணெய்க்கிராமத்தில் பிறந்தார்

83. சொல்லத்துடிக்குது மனசு என்ற நூலினை எழுதியவர் யார்?
a) புலவர் கா.கோவிந்தன்
b) வி.கே.டி.பாலன்
c) பண்டித கதிரேசசெட்டியார்
d) மறைமலைறடிகள்

84. புறம் பெயரும் பொய்மை யெலாம், புதுமைபெறும் வாழ்வே- எனப் பாடியவர் யார்?
a) பரிதிமாற்கலைஞர்
b) தேவநேயப்பாவணார்
c) பெருஞ்சித்திரனார்
d) திரு.வி.கல்யாணசுந்தரனார்

85. மதுரை பற்றிய சரியான கூற்றைத் தேர்வு செய்க?
a) தமிழ்கெழு கூடல் என புறநானூறு மதுரையைப் புகழ்கிறது
b) பாண்டிய நாடு சோறுடைத்து
c) திருமலை நாயக்கர் மஹால் மதுரை வாடிப்பட்டியில் உள்ளது
d)தாயுமானவருக்கு மீனாட்சி சிறுமியாக வந்து முத்துமணி மாலை அளித்தார்



AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com

86. விளையாட்டின் அடிப்படை நோக்கம்
a) பங்கேற்றல் b) வெற்றிப்பெறல்
c) போட்டியிடுதல் d) போரட்டக் குணத்தை வளர்த்தல்

87. வீர விளையாட்டு அல்லாதது எது?
a) நீரில் மூழ்கி மணல் எடுத்தல்
b) வேட்டையாடுதல்
c) ஏறுதழுவுதல்
d) கிளித்தட்டு

88. ஓரெழுத்து ஒருமொழி எத்தனை உள்ளன?
a) 40 b) 42 c) 41 d) 43

89. தெருவெல்லாம் தமிழ்முழகக்கம் செழிக்கச்செய்வீர் என்று கூறியவர் யார்?
a) புரட்சிக்கவிஞர் b) தமிழ்த்தென்றல்
c) தேசியக்கவி d) காந்தியக்கவிஞர்

90. மனிதன் நாகரிகம் அடைவதற்கு முதற் கருவியாக விளங்கியது எது?
a) புத்தகவாசிப்பு b) மொழி
c) சைகை d) ஆயுதம்

91. எவ்வுயிரையும் தன்னுயிர் போல் காத்து வந்தான் தமிழன் என்று கூறியவர் யார்?
a) இராஜாஜி b) பெரியார்
c) மு.வ d) அறிஞர் அண்ணா

92. வட்டம் என்பது ........... பெயர்
a) பொருட்பெயர் b) சினைப்பெயர்
c) குணப்பெயர் d) இடப்பெயர்

93. சேமமுற நாள் முழுதும் உழைப்பதனாலே- இந்த தேசமெல்லாம் செழித்திடுது நம் கையாலே! என்று பாடியவர் யார்?
a) மக்கள் கவிஞர் b) திரைக் கவித்திலகம்
c) தேசியக்கவி d) புரட்சி கவிஞர்

94. 'தமிழ் எங்கள் உயிர்' "தமிழுக்கு நாளும் செய்வோம் நல்லதொண்டு" 'இனிமை தமிழ்மொழி' என தமிழை புகழ்பவர் யார்?
a) புரட்சிக்கவிஞர் b) மகாக்கவி
c) வாணிதாசன் d) கண்ணதாசன்

95. சரியானக் கூற்றைத் தேர்ந்தெடுக்க
a) சீவகசிந்தாமணி, நரிவிருத்தம் ஆகிய நூல்கள் ஒரே ஆசிரியரால் இயற்றப்பட்டது.
b) திருத்தக்கதேவர் சேர அரச குலத்தைச் சேர்ந்தவர்
c) திருத்தக்கதேவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்
d) இவரது காலம் 11ம் நூற்றாண்டு

96. மயிலேறும் பெருமாள் என்பவரிடம் கல்வி கற்றவர் யார்?
a) தாண்டவமூர்த்தி b) ஈசானதேசிகர்
c) தேசிக மூர்த்தி d) குமருகுருபரர்

97. நிலைத்தசெல்வம் கல்விச் செல்வம் என்ற துணைப்பாட கதை பின்வரும் எந்த நூலில் இடம்பெற்றது?
a) அறவை வளர்க்கும் அற்புத கதைகள்
b) சொல்லத்துடிக்குது மனசு
c) பண்பை வளர்க்கும் பண்பாட்டு கதைகள்
d) தமிழர் பண்பாடு

98. சரியாகப் பொருந்தியுள்ளவற்றை தேர்வு செய்க
a) குயில்- அகவும் b) வாழை - பிஞ்சு
c) மலர் - பறி d) கூகை- குழறும்

99."நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவோர்" என ஓவியருக்கு இலக்கணம் வகுத்தவர் யார்?
a) தொல்காப்பியர் b) பவணந்தி அடிகள்
c) நச்சினார்க்கினியர் d) இளங்கோ அடிகள்

100. தாத்தா பாட்டி சொன்ன கதைகள் என்ற நூலினை எழுதியவர் யார்?
a) சுந்தரராசன் b) கழனியூரன்
c) மு.வ d) ஓவியர் ராம்கி

# பொது தமிழ்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 - b | 2 - c | 3 - c | 4 - a | 5 - d | 6 - d | 7 - b | 8 - d | 9 - b | 10 - d |
| 11 - a | 12 - b | 13 - c | 14 - c | 15 - d | 16 - c | 17 - c | 18 - b | 19 - a | 20 - b |
| 21 - d | 22 - b | 23 - d | 24 - a | 25 - c | 26 - d | 27 - c | 28 - b | 29 - d | 30 - b |
| 31 - d | 32 - c | 33 - a | 34 - c | 35 - b | 36 - c | 37 - d | 38 - b | 39 - a | 40 - b |
| 41 - b | 42 - c | 43 - a | 44 - b | 45 - a | 46 - d | 47 - c | 48 - d | 49 - d | 50 - d |
| 51 - d | 52 - c | 53 - b | 54 - a | 55 - d | 56 - c | 57 - b | 58 - a | 59 - d | 60 - b |
| 61 - c | 62 - d | 63 - b | 64 - c | 65 - d | 66 - d | 67 - d | 68 - c | 69 - b | 70 - a |
| 71 - b | 72 - c | 73 - b | 74 - c | 75 - d | 76 - a | 77 - b | 78 - c | 79 - a | 80 - b |
| 81 - d | 82 - d | 83 - b | 84 - c | 85 - a | 86 - c | 87 - d | 88 - b | 89 - c | 90 - b |
| 91 - d | 92 - c | 93 - b | 94 - a | 95 - a | 96 - b | 97 - c | 98 - d | 99 - c | 100 -b |

Indian IAS Academy
Education • Knowledge • Service



AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com